Volume: 02 Issue 03 Nov: 2023

களஞ்சியம் - சர்வதேச தமிழ் ஆய்விதழ்
KALANJIYAM International Journal of Tamil Studies
E-ISSN : 2456-5148
www.ngmtamil.in

# சகமனிதர்களையும் இயற்கையையும் நேசிப்பதே மனிதநேயம்

*முனைவர் பு.பிரபுராம் உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கோயம்புத்தூர் - 641029 E-Mail: ram.prtamil.prabu@gmail.com Mob: 9524244702*

Abstract:

கவிஞர் எஸ்.டி.சுந்தரம் (22 சூலை 1921 – 10 மார்ச் 1979) அவர்கள் தமிழ்க் கவிஞர், நாடக ஆசிரியர், உரையாடல் எழுத்தாளர், பாடலாசிரியர் என்ற பன்முக ஆளுமைத்திறன்களைப் பெற்றவர். இவர் சுதந்திரப் போராட்ட வீரர். 1964 முதல் 1968 வரை தமிழ்நாட்டின் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் 1968 முதல் 1976 வரை தமிழ்நாடு மாநில இயல் இசை நாடக மன்றத்தின் செயலராகவும் பணியாற்றினார். அன்னாரது “வானமுதம்” என்ற கவிதைத் தொகுப்பில் அமைந்துள்ள “மனிதன்” என்ற கவிதையின் வாயிலாக வெளிப்படும் மனிதநேயச் சிந்தனைகளை இக்கட்டுரை வெளிக்கொணர்கிறது. நம்முடன் வாழும் சகமனிதர்களிம் மீதும், நம்மைத் தாங்கிநிற்கும் பூமியினுடைய இயற்கை அமைப்பின் மீதும் அன்பு செலுத்துவதற்கான வழிமுறைகளை அவர் வழங்குகிறார்.

## குழந்தையின் ஞானம்

குழந்தைப் பருவம் ஞானம் மிக்கதாகும். குழந்தைகளிடம் பொய், களவு, பொறாமை, சுயநலம், பழிவாங்கும் உணர்வு போன்ற எதிர்மறையான சிந்தனைகள் தோன்றுவதில்லை. சித்தர்களும் யோகிகளும் மூப்படைந்து வளர்ந்த மனிதர்களை நோக்கி, மனிதர்களே நீங்கள் குழந்தைப் பருவத்திற்குத் திரும்புங்கள். நீங்கள் மீண்டும் குழந்தைக்குரிய மனநிலையை அடைவதே நல்ல ஞானம் என்கின்றனர். அத்தகு குழந்தையின் விழிகள் சுமந்திருக்கும் அப்பழுக்கற்ற பேரழகை வளர்ந்த மனிதரின் விழிகளில் காண இயலவில்லை என்று கவிஞர் உரைக்கிறார்.

**“தூங்கும் குழந்தை விழிஇமையில் தோயும் சாந்தப் பேரழகே!**
**ஏங்கும் மனிதன் பார்வையிலே ஏனோ உன்னைக் காண்கிலனே!”**

குழந்தை தூங்கிக்கொண்டிருக்கும்போது கண்கள் மலர்ந்து மெல்லச் சிரிப்பதை நம்மால் காணஇயலும். குழந்தையுடன் தெய்வம் பேசிக்கொண்டிருக்கிறது. அதனால் குழந்தை சிரிக்கிறது என்று பெரியவர்கள் கூறுவர். குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பது நம் முன்னோர் வாக்கு. அத்தகு தெய்வத்தன்மை மிக்க குழந்தை விழிகள் வெளிப்படுத்தும் அன்பு நிறைந்த பேரழகை மூப்படைந்து வளர்ந்த மனிதர்களின் விழிகளில் காணமுடிவதில்லை. வளர்ந்தவர்களின் விழிகளில் ஆசைமிகுதியால் ஏற்படுகின்ற ஏக்கத்தை மட்டுமே காணமுடிகிறது.

## இயற்கையை நேசிப்போம்

இயற்கை அளிக்கும் கொடையால்தான் மனித இனம் இன்றுவரை இப்பூமிப் பந்தில் நிலைத்திருக்கிறது. நாம் வாழவேண்டுமானால் இயற்கை வாழவேண்டும் என்ற எண்ணம் மனிதனிடம் இருப்பதில்லை.

வானம் தரும் மழைநீர் ஆறாகப் பெருக்கெடுத்து ஏரிகளில் நிறைகிறது. நீர் நமக்கும் பிற உயிர்களுக்கும் உணவாக அமைகிறது. மனிதன் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் நீரே மூல ஆதாரம். அத்தகு நீரின் திருவருள் இல்லையென்றால் உயிர்களின் இருப்பு இப்பூவுலகில் இல்லாமல் ஆகிவிடும்.

**"தேங்கும் ஏரியின் தெண்ணீரில் தெரியும் இனிமையின் திருவருளை**

**தேம்பும் மனிதன் உணராமல் தெரியாதெங்கோ தேடுகிறான்!"**

திருவருட்கருணை மிக்க நீரின் மகத்துவத்தை உணராத மனிதன், வேறெங்காவது அருள் கிடைக்குமா என்று தேடிக்கொண்டிருக்கிறான்.

அருளைத் தேடும் மனிதனே! ஆற்றங்கரையோர மரம் அளிக்கும் குளிர்ந்த நிழல், கால்நடைகளை மேய்க்கும் இடையன் ஊதும் புல்லாங்குழல் இசை, மேகம் தரும் மழை வெள்ளம் இவையெல்லாம் இயற்கை உனக்குத் தரும் அருள்.

சுவாசம் தரும் காற்று, உணவு தரும் பச்சை வயல், மழைக்கால மேகம் தரும் குளிர்ந்த சாரல், குழந்தையைத் தாங்கிநிற்கும் தாயின் கருவறை போன்று பல்வேறு கோள்களைச் சுமந்து நிற்கும் விண்வெளி, இவற்றின் அழகை நீ பார்க்கமாட்டாயா?. இத்தகு இயற்கையின் உண்மை அழகை இரசிக்கக் கற்றுக்கொள் என்று கவிஞர் உரைக்கிறார்.

## சகமனிதர்களை நேசிப்போம்

**"சோர்ந்த உயிரில் சுற்றிஎழும் சோகம் தீர்க்க மாட்டாயா?"**

சிந்திக்கும் ஆற்றல் பெற்றது மனித இனம். தன்னோடு இணைந்து வாழும் சகமனிதர்களின் சோகம் தீர்க்கவேண்டும் என்ற சிந்தனை ஏன் மனிதர்களுக்குத் தோன்றுவதில்லை. சகமனிதர் துயர்துடைப்பதே இன்பம் என்ற உண்மையை முதலில் நாம் உணரவேண்டும்.

வாழும் காலத்தில் ஆசைகள் நிறைவேறாத உயிர் பேயாய் அலையும் என்பர். ஆயின் மனிதன் உயிரோடு வாழும் காலத்தில் சுயநல

ஆசைகளுடம் பேயாய் அலைவது ஏன்?. வாய்ப்பேச்சில் மட்டும் வீரர்களாய், புறம் கூறுவதிலும் பழிதூற்றுவதிலும் வல்லவர்களாய், பேசிச் சாகும் இயந்திரங்களாய் மனிதர் இருப்பது ஏன்?. சுயநலமற்ற அன்பு, வாய்மை என்னும் தருமசிந்தனை ஆகியவற்றின் மகத்துவத்தை மனிதர் உணர வேண்டும்.

**“உன்னுள் சத்தியம் இல்லாமல் உலகின் சமரசம் பேசுகிறாய்**
**என்னே போலி வாழ்க்கையடா ஏனோ இப்படி ஏங்குகிறாய்!”**

தன் மனதில் சத்தியசிந்தனை இல்லாமல், பிற மனிதர்களிடம் சமரசம் இருக்கவேண்டுமென வலியுறுத்தும் போலி மனிதர்களை எஸ்.டி.சுந்தரம் சாடுகிறார்.

**“பேசாமிருகம் நல்லதடா பசித்தால் ஏதோ கொல்லுதடா!**
**பேசும் மனிதன் நல்லவனா பார்வையினாலே கொல்லுகிறான்!”**

பேசத் தெரியாத மிருகங்கள் கூட, பசித்தால்தான் பிற விலங்குகளை வேட்டையாடிக் கொல்கின்றன. கொல்லும் மிருகங்களுடன் மனிதனை ஒப்பிட்டால் அம்மிருகங்களை விடக் கொடியவனாக மனிதன் இருக்கிறான். சகமனிதர்களைத் தன் பார்வையாலேயே கொல்லுகிறான். நேர்மையற்ற மனிதரின் பார்வையில் அன்பும் அருளும் இருப்பதில்லை.

பகுத்தறியும் சிந்தனைமிக்க மனிதனுக்குப் பாவம் என்ற சொல்லின் பொருளை மட்டும் அறிந்துகொள்ளும் அறிவு இல்லை. தான் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று திரிகிறான். நன்மை, தீமையைப் பகுத்துணர்ந்து தீமையை விலக்கி, நன்மையை நிலைநாட்ட நாம் முயற்சிக்கவேண்டும் என்று எஸ்.டி.சுந்தரம் வலியுறுத்துகிறார்.

**“நாவன்மை பொய்வஞ்சகமே நண்பா நம்மை ஆளுதடா!”**

ஆயின் பொய், வஞ்சகம் ஆகிய கொடிய சிந்தனைகள் மட்டுமே பெரும்பான்மையான மனிதர்களின் உள்ளத்தை ஆக்கிரமித்து இருக்கின்றன என்ற நிதர்சனத்தையும் நம்முன் வைக்கிறார்.

இவ்வாறு மனிதன் முதலில் சகமனிதர்களை நேசிக்கப் பழகவேண்டும் என்றும் இப்பூமியின் இயற்கை அமைப்பைக் கருணைமிக்க உள்ளத்தோடு நேசிக்கவேண்டும் என்றும் கவிஞர் எஸ்.டி.சண்முகம் “மனிதன்” என்ற கவிதையின் வாயிலாக உரைக்கிறார்.

துணைநூல்

சுந்தரம், எஸ்.டி. - வானமுதம்(கவிதைத் தொகுப்பு), முதல்பதிப்பு - சூலை 1964, ஆண்டவன் நூலகம், லட்சுமிபுரம், சென்னை – 14.